# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 67/ந/2019

நாள் : 23/04/2019

திரு ஆர். தீபக்,
சிவகங்கை — முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
சிவகங்கை நகராட்சி,
சிவகங்கை — எதிர் மனுதாரர்

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை நகராட்சி, மஜீத் சாலை, 4–வது குறுக்குத் தெரு, 23–கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு ஆர். தீபக் அவர்களின் 16.04.2019 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 67/2019 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை நகராட்சி, மஜீத் சாலை, 4–வது குறுக்குத் தெரு, 23–கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு ஆர். தீபக் என்பவர், சிவகங்கை நகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் துப்புரவுப் பணி மேற்பார்வையாளராகப் பணியாற்றி வந்த நிலையில், 31.12.2016 முதல் பணியிலிருந்து வாய்மொழியாக நீக்கம் செய்த நகராட்சி ஆணையரின் நடவடிக்கையினை எதிர்த்து, மதுரை, தொழிலாளர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளார். மேற்குறிப்பிட்ட வழக்கு சம்பந்தப்பட்ட தொழிற் தாவா எண்.48/2018–இல் மதுரை, தொழிலாளர் நீதிமன்றம் 07.03.2019 அன்று கீழ்க்காணும் தீர்ப்பினை வழங்கியுள்ளது :-

> "…… மனுதாரரை 31.12.2016–ஆம் தேதியில் வாய்மொழியாக பணிநீக்கம் செய்த உத்தரவை இரத்து செய்து எதிர்மனுதாரர் நிர்வாகம் மனுதாரருக்கு மீண்டும் பணித் தொடர்ச்சியுடன் வேலையும் வேலை இழந்த நாட்களுக்கு முழுச்சம்பளமும் வழங்க வேண்டுமென தீர்வம் பிறப்பிக்கப்படுகிறது. ….."

மேற்குறிப்பிட்ட தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்பினைத் தொடர்ந்து, தனக்கு பணி நியமன ஆணை வழங்க ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டது. தொழிலாளர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பினை நடைமுறைப்படுத்த ஆணையிடக்கோரி உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் மனுச் செய்திட வழிவகை இல்லை. எனவே, முறையீட்டு மனுதாரரின் மனு விசாரணைக்கு ஏற்புடையதல்ல என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 23–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

29.4.19

29/4/19

பெறுநர்

1. திரு ஆர். தீபக்,
கதவு எண்.23, மஜீத் சாலை,
4–வது குறுக்குத் தெரு,
சிவகங்கை – 630 561.

2. நகராட்சி ஆணையர்,
சிவகங்கை நகராட்சி,
சிவகங்கை.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி